மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 28/2018

பெயர் – நாராயணசாமி (வா.சா.1)

நாள் – 07.08.2023

1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

அசல் வழக்கில் சொல்லியுள்ள அனைத்து புல எண்களில் கண்ட சொத்துகளும் எனது தாய், தந்தையர் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். தபசில் சொத்துக்களில் உள்ள சொத்துக்கள் எதையும் நான் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். எனவே எனது தாய், தந்தையர் கிரையம் பெற்ற சொத்துக்களில் எனது உடன்பிறந்தவர்களுக்கு சமபாகம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் 1984 ல் தன் வாரிசுகள் அனைவருக்கும் UDR பட்டா எனது தகப்பனார் பெற்றுக்கொடுத்துள்ளார். அவ்வாறு பட்டா எதுவும் எனது தகப்பனார் பெற்றுக்கொடுக்வில்லை என்றாலும் நான் தான் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் மோசடியாக எனது பெயரில் பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த பட்டாக்களை ரத்து செய்யவேண்டும் என்று 5 ம் பிரதிவாதியான கண்ணன் என்பவர் மாவட்ட ஆட்சியரிடம் மனு செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த மனு கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. ஆனால் அது தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியும். அந்த மனுவின் பேரில் என்னை விசாரித்தார்கள் என்றாலும் எனது பெயரில் உள்ள பட்டா ரத்து செய்வதற்கு சம்மதம் தெரிவித்து அதன் அடிப்படையில் நான் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்ககத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தாய், தகப்பனார் 1946 ம் ஆண்டு கிரையம் பெற்ற வா.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்களை தவிர மீதம் உள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக என்னால் மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஒருபோதும் தபசில் சொத்துக்களை என் வசம் வைத்து அனுபவம் செய்தது இல்லை என்றால் சரியல்ல. நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் வேலை பார்த்தேன். நான் சாத்தூரில் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சாத்தூர் ஆண்டாள்புறத்தில் எனது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்துக்களையும் எதையும் என் வசம் வைத்து அனுபவிக்கவோ, பராமரிக்கவோ இல்லை என்றாலும் நாளது தேதிவரை தாவா சொத்துக்கள் எதுவுமே எங்களுக்குள்

சட்டப்படியாக பிரிவினை செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 8 பிரதிவாதிகள் நான் வழக்கில் சொல்லியுள்ளதுபோல் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி ஒத்திவைக்கப்படுகிறது.